| File No: |
| --- |
| Group: |
| Year: |


**AL AMANATH HAJ SERVICE (INDIA) PVT. LTD.,**

**(APPROVED BY GOVT. OF INDIA)**

Old No. 191, New No. 251, “Hamid Building” 2nd Floor,
Anna Salai, Chennai - 600 006.
Ph: 2855 0257 / 2859 2786 / 2859 4441 / 4442 / 4443 Fax: 28543550
Email: amanath1996@gmail.com web: www.alamanath.com


# APPLICATION & AGREEMENT FOR HAJ PILGRIMAGE

**(BY INTERNATIONAL PASSPORT - BTQ - SCHEME)**

**Photo**

**Applicant Details**

Full Name: (as per passport) ______________________________

______________________________

Father Name: ______________________________

Spouse Name: ______________________________

Postal Contact Address: ______________________________

______________________________

______________________________

Phone:(Res) ______________ Mobile: ______________

Email: ______________________________

**Nominee Details**

Name: ______________________________

Contact Address: ______________________________

______________________________

Phone:(Res) ______________ Mobile: ______________

Relationship: ______________ Signature of Nominee: x ______________

I hereby appoint the above mentioned person as my nominee according to your conditions to receive my belongings and balance money if any, incase of my death before or after the commencement of the Travel. Al Amanath Haj Service (India) Pvt. Ltd., can arrange my burial in the same place of my death, according to the rules & regulations of that country.

எனது இந்த பிரயாணத்தில் இறைவன் நாட்டப்படி எனக்கு மரணம் ஏற்பட்டுவிட்டால் எனது உடமைகள் மற்றும் பணம் சம்பந்தமான அனைத்து விவகாரங்களுக்கும் தங்களின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு மேலே குறிப்பிட்டுள்ள நபரை எனது பொறுப்பாளராக எனது சுய சிந்தனையோடு நியமனம் செய்கிறேன். அந்நாட்டு சட்டதிட்டத்தின்படி அல்- அமானத் ஹஜ் சர்வீஸ் (இந்தியா) பி.லிட்., நிர்வாகமே முன்நின்று எனது உடலை அந்நாட்டிலேயே அடக்கம் செய்யலாம் என உறுதியளிக்கிறேன்.

Signature of Applicant: x ______________

# பயண விளக்கம் மற்றும் விதிமுறைகள் கையேடு

(கீழே உள்ள விதிமுறைகளை ஹஜ் பயணியாகிய தாங்கள் இதை கட்டாயம் படித்து கையொப்பமிட்டு தரும்படி கேட்டுக் கொள்கிறோம்.)

*அன்புடையீர்!*

*அஸ்ஸலாமு அலைக்கும், வரஹ்மதுல்லாஹி வபரகாத்துஹூ.*

ஒவ்வொரு ஆண்டும் எமது குழுவில் இடம் பெற்ற ஹாஜிகளுக்கும், ஆங்காங்கே ஒவ்வொரு ஊரிலும், எமது சேவைக்கு ஊக்கமூட்டி, எமது உண்மையான சேவையை நன்கு உணர்ந்து மற்றவர்களுக்கும் எத்தி வைத்துக் கொண்டிருக்கும் அனைவருக்கும் எமது துஆக்களுடன் கூடிய வாழ்த்துக்களையும் மனமுவந்து நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*வல்ல ரஹ்மானின் அளப்பெருங் கிருபையினால் 1996லிருந்து ஒவ்வொரு வருடமும் ஹஜ் மற்றும் உம்ரா, ஜியாரத் குழுக்களை அழைத்துச் சென்று, மிகச் சிறப்பான முறையில் அனைத்து ஏற்பாடுகளையும் செய்து தருகி றோம். அல்ஹம்துலில்லாஹ்! இப்புகழ் அனைத்தும் வல்ல ரஹ்மான் ஒருவனுக்கே.*

பல வருடங்களாக மக்கா மதீனாவில் பணியாற்றிய அனுபவம் நிறைந்த இந்நிறுவனத்தின் உரிமையாள ராகிய ஹாஜி M. மஹ்மூத் மரைக்கார் அவர்களால் நடத்தப்படுகிற, எங்களது அல் அமானத் ஹஜ் சர்வீஸ் மூலம் ஹஜ்ஜை நிறைவேற்றிய ஹாஜிகளின் உள்ளப்பூர்வமான துஆக்களுடன் இப்புனிதப் பணியை (ஹஜ் சேவையை) தொடர்கிறோம். உங்கள் நல்லாதரவையும், துஆவையும் நோக்கத்தில் கொண்டே அல் அமானத் ஹஜ் சர்வீஸ் செயல்படுகிறது.

- ✸ தமிழக அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.
- ✸ மத்திய அரசு, வெளியுறவுத்துறை (ஹஜ் செல்) அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.
- ✸ சவூதி அரேபிய அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.
- ✸ தமிழ்நாடு ஹஜ் பயண ஏற்பாட்டாளர்கள் சங்கத்தின் உறுப்பினர்.

நமது ஹஜ் குழுவுடன் பலமுறை ஹஜ் செய்த அனுபவமிக்க உலமாக்கள், வழிகாட்டிகள், டாக்டர்கள், சுவைமிக்க உணவு வகைகளைத் தயாரிக்கக் கூடிய திறமை மிக்க சமையற்கலை நிபுணர்கள், தங்களுக்கு கனிவுடன் சேவைகள் செய்வதற்கு நல்ல ஊழியர்களும் நம்முடன் வர இருக்கின்றார்கள். ‘‘தீனின் விளக்க பயான்கள் தினமும் நடைபெறும்’’. ஹஜ், உம்ரா, ஜியாரத் சம்பந்தமான சட்ட விளக்கங்கள் கூறப்படும். ஹாஜிகள் தங்களது சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவு பெறுவதுடன், நாம் கேட்கும் பயான் நமக்கு அதிக அமல்கள் செய்வதற்கு மிகவும் ஆர்வமூட்டக் கூடியதாகவும் அமையும். எனவே பயான்களில் ஹாஜிகள் அவசியம் கலந்து கொள்ள வேண்டும்.

*இவ்வருடம் சிறப்பு வழிகாட்டியாக இன்ஷா அல்லாஹ் அல்ஹாஜ் மௌலானா, மௌலவி O.M. அப்துல் காதிர் பாகவி (முன்னால் ஜமாஅத்துல் உலமா பேரவைத் தலைவர், முதல்வர் ஜாமியா ஹைராத்துல் இஸ்லாம் அரபிக் கல்லூரி, வீரசோழன்) அவர்கள் வரவிருக்கிறார்கள்.*

ஜித்தா விமான நிலையத்தில் இறங்கி கஸ்டம்ஸ், இமிகிரேசன் முதலிய பரிசோதனைகள் முடிந்ததும் அங்கிருந்து ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட பஸ்களில் புனித மக்காவுக்கு முதலில் புறப்பட்டுச் செல்வோம் இன்ஷா அல்லாஹ்.

## 1. தங்குமிட வசதி:-

புனித மக்காவிலும் மதீனாவிலும் ஒவ்வொரு வேளை தொழுகையையும் ஜமாஅத்துடன் தொழுது கொள்ள வசதியாக, ஹரம்ஷரீஃபுக்கு மிக அருகில் ஏர்கண்டிஷன், லிஃப்ட், டெலிஃபோன் போன்ற நவீன வசதிகள் அடங்கிய ஹோட்டல்களில் தங்க வைக்கின்றோம்.

## 2. ஜியாரத்:-

மக்காவிலும், மதீனாவிலும், சரித்திர முக்கியத் துவம் வாய்ந்த இடங்களை ஜியாரத்து செய்வதற்காக வழிகாட்டிகளுடன் பஸ்களில் அழைத்துச் சென்று காண்பிக்கப்படும்.

## 3. மருத்துவ வசதி:-

நோயாளிகளுக்கு இலவச மருத்துவசேவை உண்டு. ஆனால் ஹாஜிகள் மருந்துகளைத் தங்களது சொந்தச் செலவில் வாங்கிக் கொள்ள வேண்டும்.

## 4. விமானப் பயணம்

விமானத்தில் பயணிக்கும் நேரங்களில் விமானத்தில் கொடுக்கப்படும் உணவு மற்றும் பானங்கள், விமான நிறுவனத்தால் தரப்படுவதாகும். அவை போதுமானதாக இல்லையெனில், (சக்கரை வியாதி உள்ளவர்கள்), அவரவர்கள் சென்னையிலிருந்தே பிஸ்கட், ஸ்னாக்ஸ் போன்றவற்றை கையையில் கொண்டு வர வேண்டும். விமானத்திற்குள் எங்கள் நிறுவனத்தால் இதுபோன்ற சேவை செய்ய விமான நிறுவனத்தின் அனுமதி இல்லை. *பயணத்திற்கு குறிப்பிட்ட விமான நிறுவனம்தான் என்பதில்லாமல். பலமாதிரியான விமான நிறுவனங்களிலும் அழைத்துச் செல்லப்படும்.*

*(ஒரு சாதாரன மனிதருக்கு பயண நேரத்தில் தேவையான அளவு சாப்பாடு விமான நிறுவனத்தால் வழங்கப்படும் என்பதை அறியவும்.)*

## 5. பயணத் தொகை சம்பந்தமான விளக்கம்

a) சென்னை - ஜித்தா - சென்னை விமான டிக்கெட், எகானமி வகுப்பு (K Class Haj Fair) விசா, நுழைவு வரி (முஅல்லிம் பீஸ்), மக்கா - மதீனா, - ஜித்தா பஸ் பிரயாணம், மக்கா மதீனாவில் தங்குமிடங்கள், உணவு ஏற்பாடுகள், மினா - அரஃபா - முஸ்தலிஃபா பஸ் பிரயாணம், டெண்ட் சேவைக் கட்டணங்கள் இவ்வனைத்தும் சேர்ந்தே இந்த பிரயாணச் செலவுத் தொகையில் அடங்கும்.

b) தற்போது அமலில் உள்ள விமான டிக்கட் விலை, சவூதிக்கு செலுத்த வேண்டிய அரசு வரி (முஅல்லிம் பீஸ்), முஅல்லிமுக்கு செலுத்தும் தனிப்பட்ட சேவைக் கட்டணங்கள் ஆகிய செலவுகளின் அடிப்படையில் இந்த செலவுத் தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நாம் புறப்படும் முன்பு மேற்கொண்ட செலவுகளில் மாறுதல் ஏற்பட்டாலோ, டாலர், டிக்கட் விலையில் ஏற்றம் ஏற்பட்டாலோ அதில் ஏற்படும் கூடுதலான வித்தியாசத் தொகையை ஹாஜிகள் செலுத்த வேண்டும்.

c) இந்த வருடம் ஹஜ் _____ (ஹஜ் _____) பயண தொகையை

US டாலர் ஒன்றுக்கு ரூ. ............ எனும் ஏப்ரல் மாத விலையின் அடிப்படையில் நிர்ணயம் செய்துள்ளோம். ஆக இதில் நாம் பயணம் மேற்கொள்ளும் முன்பாக டாலர் விலையில் ஏற்றம் ஏற்பட்டால், அதற்குரிய கூடுதல் தொகை எவ்வளவோ அதை ஹாஜிகள் செலுத்த வேண்டும். **(நாங்கள் தாங்களிடம் பெறும்**

**பயணத் தொகையில் விமான டிக்கட்டுக்கான தொகை போக மீதியுள்ள தொகையை டாலராகவே மாற்றி எடுத்துச் செல்கிறோம் என்பதை அறியவும்.)**

d) கடந்த வருட சவூதியா விமானக் கட்டண விகிதப் படியும் US டாலர் ஒன்றுக்கு ரூ. ............ எனும் அடிப்படையில் பயணத் தொகை நிர்ணயிக்கப் பட்டுள்ளது. எனவே இவற்றில் மாறுதல் ஏற்பட்டால் அதற்குரிய கூடுதல் தொகை எவ்வளவோ அதை ஹாஜிகளே கட்டாயம் செலுத்த வேண்டும்.

e) நாங்கள் தெரியப்படுத்தும் பயணத் தொகையை குறிப்பிட்ட தேதியில் கண்டிப்பாக செலுத்தி விட வேண்டும். குறிப்பிட்ட தேதியில் செலுத்தத் தவறி னால், செலுத்தத் தவறியவர்களை எங்களுடைய பதிவி லிருந்து நீக்கிவிட்டு மற்றவர்களுக்கு வாய்ப்பளிக்க அல்அமானத் நிர்வாகத்தாருக்கு உரிமை உள்ளது.

f) இன்டர்நேஷனல் பாஸ்போர்ட் மூலம் வெளிநாடு பயணத் திட்டத்தின் (BTQ) அடிப்படையின் கீழ் இந்தப் பிரயாணம் அமைக்கப்பட்டுள்ளது. ஆதலால் அகில இந்திய ஹஜ் கமிட்டி, தமிழ்நாடு ஹஜ் கமிட்டி போன்ற ஸ்தாபனங்களின் சட்ட திட்டங்களும், நிபந்தனை களும் எங்களது ஸ்தாபன விதிமுறைகளில் அடங்காது.

g) எங்களிடம் கொடுத்த பயணத் தொகையில் மக்கா மதீனா சென்ற பிறகு உங்கள் சொந்த செலவுக்கென எந்தத் தொகையும் திரும்ப வழங்கப்படமாட்டாது. உங்களுக்குத் தேவைப்படும் தொகையை அதற்கு தனியாக பணம் செலுத்தி அந்நிய செலாவணி பெற்றுக் கொள்ள வேண்டும்.

h) அன்னிய செலவாணி கொண்டு செல்லும் போது அதை வாங்கியதற்கான ரசீது (Bill) கட்டாயம் வைத்திருக்க வேண்டும். அப்படியல்லாமல் முறையான ரசீது இல்லாமல் ஏர்போர்டில் பிடிபட்டால் அல்அமானத் நிர்வாகம் அதற்கு பொறுப்பேற்காது.

**குறிப்பாக: இந்திய பணத்தை எக்காரணத்தைக் கொண்டும் வெளிநாட்டுக்கு எடுத்துச் செல்லக்கூடாது. இது இந்திய சட்டப்படி குற்றமாகும்.**

## 6. ஹாஜிகளின் சொந்த பொறுப்பிலுள்ள செலவுகள்

(இவை நிறுவன செலவில் அடங்காது)

a) தங்கள் இருப்பிடங்களிலிருந்து (ஊரிலிருந்து) சென்னை விமான நிலையம் வந்து சேரும் வரை தங்கும் இடம், சாப்பாடு, போக்குவரத்து ஏற்பாடுகள் உங்கள் சொந்த செலவுகளிலேயே அடங்கும். சென்னை விமான நிலையத்திற்கு உங்கள் சொந்தப் பொறுப்பிலேயே வந்து சேர வேண்டும்.

b) விமான நிலைய வரி.

c) அளவுக்கு அதிகமான லக்கேஜ் கட்டணம், (ஊர் திரும்பும் போது ஜித்தா ஏர்போர்டில்)

d) குர்பானி (உங்கள் சொந்தச் செலவில்தான் கொடுக்க வேண்டும்)

e) விமான நிலையங்களில் பயணத்தின் போது ஏற்படும் உணவு, குளிர்பானம் மற்றும் டீ, காஃபி செலவுகள்.

f) ஹஜ் பிறை 10, 11, 12 நாட்களில் ''தவாஃபே ஜியாரா'' செய்வதற்காக மினாவில் இருந்து மக்கா போய் (தவாஃப் செய்து விட்டு) மக்காவிலிருந்து மினா வர அவரவர்கள் சொந்தச் செலவிலேயே சென்று வர வேண்டும். (அந்தச் சூழ்நிலையில் அனைவரும் ஒரே நேரத்தில் தயாராக மாட்டோம். இதன் காரணத்தால் பஸ் ஏற்பாடு செய்ய இயலாது. வாகனங்களும் டெண்ட் அருகே கொண்டு வந்து நிறுத்த இயலாது.)

## 7. ஹாஜிகள் கவனிக்க வேண்டிய முக்கிய விவரங்கள் மற்றும் விதிமுறைகள்

a) அட்வான்ஸ் ரூ. 50,000/- செலுத்தி முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். அட்வான்ஸ் கட்டாத விண்ணப்பங்கள் பதிவுக்கு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. பயணத் தொகையில் அட்வான்ஸ் ரூ 50,000 போக மீதித் தொகையை இரண்டு தவனையாக கட்டிவிட வேண்டும். குறிப்பிட்ட தேதிக்குள் கட்டாயம் செலுத்திவிட வேண்டும்.

b) எங்களது சென்னை அலுவலகத்தில் மட்டுமே நேரில் பணம் செலுத்தலாம், அல்லது ''Al Amanath Haj Service (India) Pvt. Ltd.,'' என்று பெயரிடப்பட்ட சென்னையில் மாற்றத்தக்க பேங்க் டிராஃப்ட் மூலம் செலுத்த வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

c) பெண்கள் ஷரீயத் சட்டத்திற்கு உட்பட்ட ஆண் (மஹ்ரம்) துணையுடன் விண்ணப்பிக்க வேண்டும். கர்ப்பிணிப் பெண்களுக்கு அனுமதி கிடையாது. கண் பார்வை அற்றவர்கள், வியாதியஸ்தர்கள், நடமாட இயலாத பலஹீனர்கள் ஆகியோருக்கு அனுமதி இல்லை. Wheel Chair-ல் தான் தவாஃப் சயீ செய்ய முடியும் என்கிற அளவிற்கு நடக்க முடியாத நிலையில் இருப்பவர்கள் Wheel Chair-ல் வைத்து தள்ளுவதற்குரிய துணையுட னேயே பயணம் மேற்கொள்ள வேண்டும். மக்கா மதீனாவில் Wheel Chair-ல் வைத்து தள்ளிச் செல்ல ஆட்களை எங்களால் ஏற்பாடு செய்ய இயலாது.

d) போதைப் பொருட்கள், மூக்குப் பொடி, கசகசா, சுருட்டு, பீடி, ஆயுதங்கள் போன்றவற்றை கொண்டு போகக் கூடாது. அப்படி கொண்டு சென்று ஏர்போர்ட்டில் பிடிபட்டால் அதற்கு எங்களது நிர்வாகம் பொறுப்பேற்காது.

e) பயணிகளுக்கு கொடுக்கப்படும் அடையாள அட்டைகளை (Identity Card) கவனமாக வைத்துக் கொள்வதுடன், தங்களின் பதிவு நம்பரையும் (File No) நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். மூளைக்காய்ச்சல் தடுப்பு ஊசி போட்டுக் கொள்வது ஹாஜிகளின் கடமையாகும்.

f) சீதோஷ்ண நிலைமாற்றம், விபத்துக்கள் மற்றும் வேறு சில காரணங்களால் ஏற்படும் நஷ்டங்கள், வியாதிகள், உயிரிழப்பு போன்றவைகளுக்கு நாங்கள் பொறுப் பாளிகள் அல்ல. எனினும் வியாதியின் அறிகுறிகள் தென்பட்ட செய்தியை நாங்கள் அறிந்தவுடனே வைத்தியத்திற்குரிய ஏற்பாடுகள் செய்யப்படும்.

g) மக்கா, மதீனாவில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனி இடவசதிகள்தான் செய்யப்படும். குடும்பத் தோடு கணவன் மனைவி தங்கவேண்டுமென்றால் கூடுதல் பணம் செலுத்தி தனிப்பட்ட அறை எடுத்துக் கொள்ள வேண்டும். தனிப்பட்ட ஒவ்வொருவரும் தங்கள் உடைகளை தனித்தனிப் பெட்டியில் வைத்துக் கொள்ள வேண்டும். காணாமல் போவது, திருட்டுப் போவது முதலியவைகளுக்கு நாங்கள் பொறுப்பல்ல. திருடர்கள், ஏமாற்றுக்காரர் களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

h) தங்களைச் சந்திக்க வருகின்றவர்களை தங்களது அறையில் தங்க வைக்கக் கூடாது. அவர்களுக்கு உணவு அளிக்க நாடினால், நிர்வாகத்திடம் முன்னரே கூறி அனுமதி பெற வேண்டும்.

i) பயணிகள் தங்களின் வழிகாட்டியின் கீழ் உள்ள குழுவில்தான் கடைசி வரை இருக்க வேண்டும். பிரியக்கூடாது. குறிப்பிட்ட நாட்களைத் தவிர அதிக நாட்கள் எந்த இடத்திலும் தங்குவதற்கு அனுமதி இல்லை.

j) இதில் அறிவிக்கப்பட்டிருக்கும் பிரயாண முறைகளும்,

தேதியும் பரிசீலனைக்குப் பிறகே வெளியிடப் பட்டிருக்கிறது. ஆனால் எதிர்பாராத விதமாக (வேலை நிறுத்தம், புயல், வெள்ளம் போன்ற வேறு காரணங் களினால்) மாறுதல் ஏற்பட்டாலும், பிரயாணத்தில் தாமதங்கள் ஏற்பட்டாலும் அதை அனுசரித்துக் கொள்ள வேண்டும்.

k) ஒருவர் தங்களின் பயணத்தை பயணத் தேதியிலிருந்து இரண்டு மாதத்திற்கு முன்பாகவே ரத்து செய்தால் சர்வீஸ் சார்ஜ் ரூ. 5,000/- பிடித்துக் கொண்டு பாக்கித் தொகை தரப்படும். பயணம் புறப்படும் தேதிக்கு 2 மாதத்திற்கு முன்பு ரத்து செய்யாமல் பயண நெருக்கடியில் ரத்து செய்தால் ஹஜ் முடிந்து திரும்பி வந்த பிறகே பிடித்தம் எவ்வளவு என்பது தெரிவிக்கப்படும்.

l) பதிவு செய்தபின் ஒருவர் புறப்படுவதற்கு முன் இறந்துவிட்டாலோ, அல்லது கடுமையான நோய் ஏதும் ஏற்பட்டாலோ உடனே எங்களுக்கு எழுத்து மூலமாக தகவல் தெரிவிக்க வேண்டும். அவர் கட்டிய பணம் அவரால் நியமிக்கப்பட்ட வாரிசுதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். பயணத்தில் இறந்து விட்டால் இறந்த உடல் மக்கா, மதீனாவிலேயே நல்லடக்கம் செய்யப் படும். தாய் நாட்டுக்குக் கொண்டு வர இயலாது. நீங்கள் பணம் செலவு செய்தாலும், எங்களால் அந்த ஏற்பாடு களை செய்ய இயலாது.

m) விமானத்தில் போகும் போது எமது ஹஜ் சர்வீஸ் சார்பில் வழங்கப்பட்டிருக்கும் பெட்டியில் மட்டுமே உடைமைகளை கொண்டு வரும்படி கேட்டுக் கொள்கிறோம். அடையாளம் காண்பதற்கு எளிதாக இருக்கும் என்பதற்காகவே உங்கள் அனைவருக்கும் ஒன்றுபோல பேக் (பெட்டி) வழங்குகிறோம். பயண காலங்களில் அதிக எடையுள்ள லக்கேஜ்கள் கொண்டு வரக்கூடாது.

## முக்கியமாக ஹாஜிகள் அறிந்திருக்க வேண்டியவை

### மினா, அரஃபா முஸ்தலிபா

மினா, அரஃபா ஆகிய இடங்களிலுள்ள கூடாரங்கள், சவூதி அரசாங்கத்தினால் அமைக்கப்படுகின்றது. கூடாரத்தில் தங்கும் எண்ணிக்கைகளையும் அரசாங்கமே நிர்ணயம் செய்கின்றது. கூடாரங்களில் இடவசதியின்மை, வசதிகள் குறைவு போன்ற நிலையிலும் எங்களது நிர்வாகம் பொறுப் பாகாது. இருப்பினும் அந்த இடங்களில் எங்களால் இயன்ற அளவு படுப்பதற்கு சாதாரண தரையில் போடக் கூடிய பஞ்சுமெத்தை, தலையணைகள் போன்ற ஏற்பாடுகள் செய்துதரப்படும். உரிய நேரத்திற்கு சாப்பாடு மற்றும் தேநீர் போன்றவை தங்கு தடையின்றி வழங்கப் படும். இன்ஷா அல்லாஹ்!

அரஃபாவிலிருந்து முஸ்தலிஃபா வந்து, முஸ்தலிஃபாவிலிருந்து திரும்பவும் நாம் தங்கியுள்ள மினா கூடாரங்களுக்கு செல்லும் போது, கூடாரத்தின் நுழைவாயில் அருகே பஸ்களைக் கொண்டுவர இயலாது. அன்றைய தினம் கூட்ட நெருக்கடியின் காரணத்தால் பாதி வழியிலேயே வாகனங்களை நிறுத்தி விடுவார்கள். எனவே இறங்கு மிடத்திலிருந்து இரண்டு அல்லது மூன்று கிலோ மீட்டர் தூரம் வரை நடந்து செல்லக்கூடிய சூழல்கள் கடந்த மூன்று வருடங்களாக ஏற்பட்டுக் கொண்டிருக் கிறது. அப்படி கூட்ட நெரிசலில் வாகனம் நின்று விட்டால் வாகனம் நின்ற இடத்திலிருந்து கூடாரத்திற்கு நடந்தே செல்ல வேண்டும். அப்பொழுது எங்கள் நிர்வாகத்தால் எந்த ஏற்பாடும் செய்ய இயலாது. இதை தயவு செய்து எங்களுடைய குறையாக எடுத்துக் கொள்ள வேண்டாம். எனவே ஹாஜிகள் அன்றைய தினம் மூன்று அல்லது நான்கு கிலோ மீட்டர் தூரம் நடப்பதற்குக் தயாராகிக் கொள்ள வேண்டும்.

மக்காவிலிருந்து மதீனா செல்லும் பஸ் பிரயாணங் களிலும், மதீனாவிலிருந்து மக்கா செல்லும் பிரயாணங் களிலும் சவூதி அரசாங்க விதிமுறைகளின்படி சோதனைச் சாவடிகளில் (பாஸ்போர்ட் தஸ்தாவேஜுகள் சரிபார்த்து பிரிக்கும் இடம்) ஒவ்வொரு வருடமும் தாமதம் ஏற்படு கிறது. இது எங்கள் நிர்வாகத்தினரால் தலையிட்டு எதுவும் செய்ய முடியாது. எனவே எத்தனை மணிநேரம் ஆனாலும் பொறுமையாகக் காத்திருந்துதான் நாம் தங்குமிடத்திற்கு செல்ல நேரிடும். இது பயண ஏற்பாட்டாளர்களின் தவறோ அல்லது நிர்வாகக் கோளாறோ அல்ல என்பதையும் அறியவும்.

### பஸ் பிரயாணம்

ஜித்தா to மக்கா to மதீனா to மக்கா to ஜித்தா ஏற்போர்ட் இந்த - ஐந்து தடவைக்கும், பயணிக்கக் கூடிய வாகனங் களுக்கு நாம் முன் கூட்டியே ஜித்தா ஏர்போர்ட்டில் நுழையும் அன்றே முழு பணமும் செலுத்தியாக வேண் டும். எனவே பல கம்பெனிகளில் உள்ள பஸ்களை நமக்கு பகிர்ந்து அளிக்கக் கூடிய (Transport Syndicate) எனும் நிர்வாகத்தின் மூலமே எந்த கம்பெனி பஸ் என ஒவ்வொரு டிரிப்பிற்கும் நிர்ணயித்து நமக்கு நமது முஅல்லிமின் மூலம் அனுப்பி வைக்கப்படுகிறது. சில பஸ்களில் இருக்கை நெருக்கமாகவும், சிறியதாகவும் இருக்கும். சில பஸ்களில் சாய்வு இருக்கை வசதி இருக்கும், இல்லாமலும் இருக்கும். இதில் நாங்கள் தலையிட முடியாது (தலையிடக் கூடாது, இதுதான் அந்த நாட்டுச் சட்டம்) எனவே பஸ் பயணத்தின்போது ஏற்படும் கால் வலி, முதுகு வலி போன்றவற்றை தயவு செய்து ஹாஜிகள் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

### மினா டெண்ட் வசதிகள்

மினாவில் ஹஜ்ஜுடைய காலங்களில் நாம் தங்கும் டெண்ட் வசதிகள் நபர் ஒன்றுக்கு 55 செமீ. அகலம் எனும் முறையில் நமக்கு சவூதி அரசாங்கத்தால் நியமித்துள்ள முஅல்லிம்தான் பிரித்துத் தருகிறார்கள். இதில் நெருக்கடி என்பது எல்லா வருடங்களிலும் ஏற்படுவது தான். எனவே இது அல் அமானத் நிர்வாகத்தினரால் ஏதும் செய்ய இயலாது என்பதை ஹாஜிகள் நன்கு அறிந்து கொள்ள வேண்டும்.

### அஜீஸிய்யா ரூம் வசதி விவரங்கள்.

அஜீஸிய்யா என்பது ஹரம் ஷரீஃபுக்கும் நாம் ஹஜ்ஜுடைய காலங்களில் டென்டில் தங்கக்கூடிய மினாவுக்கும் இடைப்பட்ட (ஏரியா) பகுதி. இங்கு நமது தங்குமிடம் 'ஹோட்டல்' போன்ற வசதி உள்ளதாக இருக்காது. மாறாக பில்டிங் ஸ்டைலில் இருக்கும். அதேபோல், டாய்லட் வசதிகள் 8 நபர்களுக்கு ஒரு டாய்லட் (பாத்ரூம்) எனும் அமைப்பில் இருக்கும். எல்லா ரூமிலும் அட்டாச் டாய்லட் இருக்காது. தினசரி விரிப்புகள் மாற்றுதல், டவள், சாம்பூ போன்றவையும் இருக்காது. ஹாஜிகள் நாம் ஏற்கனவே தங்கிய ஹோட்டல்களில் இருந்தது போன்ற வசதிகளை தயவு செய்து அஜீஸிய்யா பில்டிங்கில் எதிர்பார்க்க வேண்டாம்.

**மேலே குறிப்பிட்ட அனைத்து விஷயங்களையும் நன்கு படித்து உணர்ந்து ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக் கொள்வதுடன் வல்ல ரஹ்மான் நமது அனைவரின் பயணங்களையும் இலகுவாக்கி வைத்து ஹஜ்ஜை மப்ரூராக மக்பூலாக ஏற்றுக் கொள்வானாக ஆமீன்.**

## BTQ Declaration

I hereby declare that I am eligible for Basic Travel Quota .............. and an amount of (US $...................... ) released under BTQ., which I agree to surrender to Al Amanth Haj Service (India) Pvt. Ltd., for my travel expenses abroad.

**அடிப்படை பிராயண ஒதுக்கீடு உறுதிமொழி**

அடிப்படை பிராயண ஒதுக்கீட்டுத் தொகை பெற நான் தகுதியானவன் அதன் அடிப்படையில் ............... வருட கோட்டாவில் (US $............................) எடுக்கப்பட்டுள்ளது. மேலும் அந்த தொகை அமெரிக்க டாலராக பெற்றுக்கொண்டு, வெளிநாடுகளில் எனக்காக செலவு செய்ய அல்-அமானத் ஹஜ் சர்வீஸ் இந்தியா (பி) லிமிடெட்டிடம் ஒப்படைக்கிறேன்.

X

Signature of Applicant.

Dear Sir, I the undersigned ........................................................................................ wish to join your group for tour No ................................................. for Haj ........................... I have read and understood all the terms and conditions of above tour and hereby agree to abide the same.

நான் தங்களின் நிபந்தனைகளையும், விதிமுறைகளையும் படித்து புரிந்து கொண்டேன் மேலும் தங்களின் ஹஜ்-குழுவில் சேர்ந்து தங்களின் நிபந்தனைகளை பின்பற்றி நடப்பேன் என உறுதியளிக்கிறேன்.

The personal particulars and other details given by me as above are true to the best of my knowledge and I am pleased to enroll my name in the tour and request you to intimate my registration number at the earliest.

மேலே குறிப்பிட்டுள்ள என்னுடைய அனைத்து தஸ்தாவேஜீகளும், விபரங்களும் எனது அறிவிற்கு உட்பட்டு உண்மையானவை என உறுதியளிக்கிறேன். தாங்கள் தங்களின் குழுவில் சேர்த்துக் கொண்டு, சேர்த்துக் கொண்டதற்கான பதிவு என்னை உடனடியாக தெரியப்படுத்த வேண்டுகிறேன்.

X

Signature of Applicant.

Here with I enclose an advance sum of Rs ............................. (Rupees .......................................... ......................................................................................................................................) by Cash / Cheque D.D No. .................... dated ..................... of ............... and agree to pay the balance amount as per your terms.

இத்துடன் முன்பணமாக ரூ. .................................................................................................................... DD எண் ......................... தேதி ........................... மூலமாக அனுப்புகிறேன். மேலும் தங்களின் நிபந்தனைகளின் படி மீதத்தொகையும் செலுத்துவேன் என உறுதியளிப்பதுடன், நீங்கள் குறிப்பிடும் தேதிக்குள் முழுபயண தொகையையும் செலுத்துவேன் எனவும் உறுதியளிக்கிறேன்.

X

Signature of Applicant.